ஸ்ரீ:




திருக்கோஷ்டியூர் கோவில்

மஹா ஸம்ப்ரோக்ஷண மலர்.

சிவகங்கை தேவஸ்தான வெளியீடு.

1961.

ஸ்ரீ:



திருக்கோஷ்டியூர்

ஸ்ரீ ஸௌமியநாராயணப்பெருமாள்

கோவில்

மஹா ஸம்ப்ரோக்ஷண மலர்

(கும்பாபிஷேக மலர்)

சிவகங்கை தேவஸ்தான வெளியீடு.

*

சார்வரி வருஷம் பங்குனிமீ 13௳

26-3-1961.

*

மதுரை, ஹரிஸமய திவாகரம் பிரஸ்.

1961.

ஸ்ரீ:

பொருளடக்கம்

இக் கோவிலில் இராஜகோபுரத்திற்கும், துவஜஸ்தம்பத்திற்கும் இடையே அலங்காரமாக விளங்கும் ஏகாதசிக் கொட்டகை
சுமார் ரூ 25,000 செலவில்
சொக்கநாதபுரம்
உயர்திரு அ. மெ. அ சுப்ரமணியன் செட்டியார்
அவர்களாலும்,
அ. ரும. லெ. வெங்கடாசலம் செட்டியார்
அவர்களாலும்
உபயமாக செய்யப்பட்டது.

ஸ்ரீ:



அணிந்துரை.

திரு. அ. உத்தண்டராமன் அவர்கள், ஐ. ஏ. எஸ்.,

(ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை).

குற்றமின்றிக் குணம் பெருக்கிக் குருக்களுக்கனுகூலராய்
செற்றமொன்றுமிலா தவண்கையினர் கள்வாழ்திருக்கோட்டியூர்
துற்றயேழுலகுண்ட தூமணிவண்ணம் தன்னைத்தொழாதவர்
பெற்றதாயார் வயிற்றினைப் பெருநோய் செய்வான் பிறந்தார்களே.

—பெரியாழ்வார்.

ஸ்ரீ வைகுண்டபதியான சர்வேசுவரன் அடியார்களைக் காத்தற்பொருட்டு அவன் இருப்பை விட்டு உலகத்திலுள்ள கோயில்களில் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியுள்ளான். அங்ஙனம் எழுந்தளியுள்ள திருக்கோயில்களுள் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்கள் நூற்றெட்டு. அவைகளில் தண்ணூர் தமிழளிக்கும் தன்பாண்டிய நாட்டிலிருப்பவை பதினெட்டுத் திருப்பதிகள். "ஈரொன்பதாம் பாண்டி" என்று கூறப்பட்டிருக்கிறது. திருக்கோஷ்டியூர் இப் பதினெட்டில் ஒன்று. இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புத்தூர்ப் பகுதியில் உள்ளது இதற்குக் கோஷ்டிபுரம் என்ற பெயரும் உண்டு.

கோட்டம் (கோயில்) உள்ள ஊர் கோட்டியூர் என்றும், திருமால், நான்முகன், உருத்திரன், இந்திரன் முதலியவர்கள் இரணியனை வதம் செய்யும் பொருட்டுக் கூட்டம் (கோஷ்டி) கூடி ஆராய்ந்த இடம் என்றும், ஆதலால் இதற்குத் திருக்கோஷ்டியூர் என்று பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர். நம்முடைய பாவங்களாகிய திருக்கை ஓட்டும்படியான ஊர் என்றும் சொல்லுவர். இத் தலத்தைப் பற்றிய அந்தாதிப் பாடலில் அழகிய மணவாள தாசர் என்ற திவ்விய கவி பிள்ளைப்பெருமாளையங்கார் "ஆசைத் திருக்கு ஓட்டி ஆள்" என்று எம்பெருமானை வேண்டுகிறார்.

பேயாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் என்ற ஐந்து ஆழ்வார்களும் இத் தலத்து எம்பெருமான் மீது பாசுரங்கள் அருளிச்செய்துள்ளனர். 'வண்ணமாடங்கள் சூழ்திருக்கோட்டியூர்', 'வண் கையினார் வாழ்திருக்கோட்டியூர்', 'செங்நெலார் வயல்சூழ் திருக்கோட்டியூர்', 'செங்கண்மால் திருக்கோட்டியூர்' என்றெல்லாம் அவர்கள் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். கோட்டியூர் எம்மானை நினையாதவர்களைப் 'பூமி பாரங்கள்' என்றும், அம் முதல்வனைச் சிந்தியாதவர்கள் "பெற்றதாய் வயிற்றில் பெருநோய் செய்வான் பிறந்தார்கள்" என்றும் வியந்தோதியுள்ளனர்.

திருக்கோட்டியூருக்கு நடுநாயகமாய் விளங்குவது திருக்கோயில். கோபுரத்துடன் கிழக்கு நோக்கி அழகாகத் திகழ்கிறது. இங்குள்ள அஷ்டாங்க விமானம் மிகவும் பிரசித்திபெற்றதும், தனிச்சிறப்பு வாய்ந்ததுமாகும். மூலைக்கு இரண்டாக எட்டு விமானங்கள் இருக்கின்றன. இவை அஷ்டாக்ஷரத்தைக் குறிக்கும் என்பர். இந்த விமானம் ஒன்றின்மேல் ஒன்றாக மூன்று தளங்களையுடையது. முதல் தளத்தில் திருப்பாற்கடல் நாதன் சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். 'உரகமெல்லணையான்' என்பர் பெரியாழ்வார். நடுத்தளத்தில் ஸ்ரீதேவி, பூதேவிகளோடு நின்ற திருக்கோலத்தில் பெருமாள் காட்சியளிக்கிறார்.

மேல்தளத்தைப் பரமபதம் என்பர். அங்கு ஸ்ரீதேவி பூதேவிகளுடன் எம்பெருமான் வீற்றிருந்த திருக்கோலத்தில் அருள்புரிகிறார். முதல் தளத்திற்கடியில் நடன கிருஷ்ணன் சந்நிதியிருக்கிறது. வடக்குப் பிரகாரத்தில் ஓடும் இரணியனைப் பிடித்துப் போர் செய்யும் நரசிங்கப்பிரான் திருவுருவம் இருக்கிறது. அடியில் கூத்தாடிய கிருஷ்ணன், அதற்குமேல் கிடந்தும், அதற்குமேல் நின்றும், அதற்குமேல் இருந்தும், ஓடும் இரணியனைப் பிடிக்கையில் நடந்தும், என்ற இவ்வகையான ஐந்து திருக்கோலங்களில் இங்கு இறைவனைக் காணலாம்.

எம்பெருமான் திருநாமம் சௌமிய நாராயணன்; தேவியின் திருப்பெயர் திருமாமகள் நாச்சியார். இங்கு இந்திரனுக்கும் கதம்ப மகரிஷிக்கும் பிரத்தியட்சம். தீர்த்தம் தேவபுஷ்கரணி. மூர்த்தி, தலம், தீர்த்தம் எல்லாம் சிறந்து விளங்குகின்றன.

ஸ்ரீபாஷ்யக்காரரென்றும் இராமாநுஜரின் குருவான திருக்கோஷ்டியூர் நம்பிகளின் அவதார ஸ்தலம் இதுவே. ஸ்ரீரங்கத்திலிருந்து இவ்விடத்துக்கு பதினெட்டு முறை வந்து நம்பிகளிடம் இராமாநுஜர் அஷ்டாக்ஷரத் திருமந்திரார்த்த உபதேசத்தைப் பெற்றார். அந்த திருமந்திரத்தை எவருக்கும் சொல்லுதல் கூடாது. அப்படிச் சொன்னால் நரகமே கதி என்பது குரு ஆணை. ஆனால், எட்டெழுத்து மந்திரத்தைக் கேட்டவர் முக்தியடைவார் என்பதை எண்ணி, தமக்கு மாத்திரம்தான் நரகம் கிடைத்தாலும் கேட்ட எல்லோருமே முக்திபெறுவரன்றோ என்ற பரந்த நோக்கத்துடன் விமானத்தில் ஏறி எல்லோரையும் அறைகூவியழைத்து "ஓம் நமோ நாராயணாய" என்ற எட்டெழுத்து மந்திரத்தை வெளிப்படையாக உபதேசித்தார். இதை உணர்ந்த இவருடைய திருவுருவம் விமானத்தின்மேல் அமைக்கப்பட்டு இருக்கிறது.

இந்தக் கோயிலில் சரவேசுவர மூர்த்தி சந்நிதியும் இருக்கிறது நந்தி, விநாயகர் முதலியோரும் உள்ளனர், ஆதலின் சைவ வைணவ ஒற்றுமைக்கு இக் கோயில் நிலைக்களனாகவும் விளங்கு கின்றது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உண்மையை வற்புறுத்தும் வகையில் அமைந்துள்ள,

இந்தக் கோயில் சிவகங்கை சமஸ்தான ஆட்சியில் உள்ளது, அரசாங்க மான்யத்தையும் மக்கள் நன்கொடைகளையும் ஆலய நிதியையும் கொண்டு திருப்பணி செய்யப்பெற்று தேவஸ்தானத் தாரால் மகா சம்ப்ரோட்சணம் செய்யப்பெறும் இந்த நன்னாளில் ஒரு மலர் வெளியிடுவது சாலப் பொருத்தமானது. அதற்குப் பக்தகோடிகள் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

எங்களெம்மிறையெம்பிரா னிமையோர்க்கு நாயகன் ஏத்தடியவர்
தங்கள் தம்மனத்துப் பிரியாதருள் புரிவான்
பொங்கு தண்ணருவி புதம்செய்யப் பொன்களே சிதறுமிலங்கொளி
செங்கமலமலரும் திருக்கோட்டியூரானே. —திருமங்கையாழ்வார்.





ஸ்ரீ பூமிநீளா சமேத ஸ்ரீ ஸௌம்ய நாராயணன்

ஸ்ரீ :

மாறன் மலரடி வாழ்க

முன்னுரை.

பாண்டிநாட்டு திவ்விய தேசங்கள் பதினெட்டு. அவற்றுள் ஆழ்வார்கள் ஐவரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்று, நாலாயிர நான்மறையின் பிரணவப்பொருளாம் திருப்பல்லாண்டிலேயே இடங் கொண்டு திகழ்வது திருக்கோட்டியூராகும். இங்கு ஸ்ரீ சௌமிய நாராயணன், திருமகள் நிலமகள் மற்றுங் குலவாயர் கொழுந்துடன் மேவி உறைகின்ருன்.

இந்த ஸ்ரீ சௌமியநாராயணப்பெருமாள் கோவில் சிவகெங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. சில மாதங்களாக இக் கோயிலில் பல திருப்பணிகள் நடைபெற்று முடிவுற்றன. விமான ஜீரணோத்தாரண கும்பாபிஷேகம் இன்று 26-3-1961உ எம்பெருமான் திருவருளால் நடைபெறுகிறது.

இந்த விசேஷ வைபவத்தில் கும்பாபிஷேக நினைவாகவும், உரகமெல்லணையான் உறையும் ஊரின் சிறப்பினை அன்பர்கள் அனுபவிக்கவேண்டும் என்ற பெருவிருப்பாலும், இம் மலர் வெளியிடப்படுகிறது.

இம் மலரைத் திருமாமகட்கினியான் திருவடிவாரங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,

திருக்கோட்டியூர்,
26—3—1961.

சிவகெங்கை தேவஸ்தானம்.

ஸ்ரீ:

திருக்கோட்டியூர் ஸ்தல வரலாறு.

ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட பாண்டிய நாட்டு திவ்ய தேசங்கள் பதினெட்டினில் இது ஒன்று.

க்ஷேத்திரத்தின் பெயர்	—	கோஷ்டீ க்ஷேத்திரம்.
மூலவர் திருநாமம்	—	உரகமெல்லணையான்.
உத்ஸவர்	--	ஸ்ரீ ஸௌமிய நாராயணன்.
நாச்சியார்	—	திருமாமகள் நாச்சியார்.
விமானம்	—	அஷ்டாங்க விமானம்.
புஷ்கரணி	—	அமர புஷ்கரணி.

கிழக்கே திருமுக மண்டலம் நின்றும். இருந்தும், நடந்தும், கிடந்தும், கூத்தாடியும், நின்ற திருக்கோலம்.

கதம்ப மஹரிஷிக்கும், இந்திரனுக்கும் பிரத்யக்ஷம்.

பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ் வார், திருமழிசை ஆழ்வார் இவர்களால் மங்களாசாஸனம்.

புராண வரலாறு.

மணிமுக்தா நதிக்கரையிலுள்ள இந்த ஸ்தலமானது முற்காலத் தில் கதம்ப மஹரிஷியின் புண்ணியமான ஆசிரமமாயிருந்தது. இரணியாசுரன் மூவுலகத்தையும் ஆட்சி செய்து தேவர்களைத் துன் புறுத்தி வருங்காலத்தில், மும்மூர்த்திகளும், மற்றும் எல்லா தேவர் களும், அவ்வசுரனை ஒழித்தற்கு ஒன்றுசேர விரும்பினர். கதம்ப முனிவர் உறைந்த இத் திருத்தலத்தில் அரக்கன் எவனும் நுழைய முடியாது. அது கதம்ப முனியின் சாபம். எனவே மும்மூர்த்தி களும் தேவர்களும் தனித்து யோசனை செய்யத் தக்க இடம் இஃதென்று எண்ணி திருக்கோட்டியூரில் ஒன்று கூடினர்.

திருமால் நரசிங்க ரூபம் எடுத்துத் தன் வாளுகிரினால் இரணியனைக் கொன்று முடிப்பது என்று முடிவு செய்தனர். மும்மூர்த்திகளும் இங்கு கூடியதால்தான் இத் தலத்திற்கு கோஷ்டீபுரம் என்ற பெயர் வந்தது. கோஷ்டீ என்றால் கூட்டம் என்பது பொருள்.

இரணிய வதத்திற்குப் பிறகு கதம்ப முனிவர் பிரமனை அணுகி "ஸ்வாமி! சிங்கப்பெருமானாய் அவுணன் உடல் கீண்ட எம்பெருமானின் அழகுத் திருமேனியை அடியேன் தொழுதெழ விரும்புகிறேன்" என்று பிரார்த்தித்தார். உடனே பிரமனது ஆணை மேற்கொண்டு மயனும், விசுவகர்மாவும் ஒரு திவ்யமான அஷ்டாங்க விமானத்தை சிருஷ்டி செய்தனர். அவ் விமானம் மூன்று தளங்கள் உடையதாய் கண்கவர் வனப்புடையதாய்த் திகழ்ந்தது.

தேவர்களின் நடுவிலிருந்ததால் "ஸ்தித நாராயணன்" என்றும், ஆதிசேஷன் மேல் சயனித்திருப்பதால் "உரகமெல்லணையான்" என்றும், தென்றிசை நோக்கிய நரசிம்மனுக்கு "தக்ஷிணேசுவரன்" (தெற்காழ்வான்) என்றும். வடதிசை நோக்கினதால் "உத்தரேசுவரன்" (வடக்காழ்வான்) என்றும் அவர்களால் பெயரிட்டு அமைக்கப்பட்டது.

கதம்ப மகரிஷி உரகமெல்லணையானை ஆராதித்து வருங்கால், இந்திரன் வெள்ளியான், கரியான் என்றழைக்கப்படும் ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் விக்ரஹத்தை ஸ்ரீ பூமிநீளைகளுடன் தேவலோகத்தில் நின்றும் எழுந்தருளப்பண்ணி மஹரிஷியினிடத்தளித்தான். மேலும் சித்திரையில் சித்திரா நட்சத்திரத்தில் எம்பெருமானுக்குத் திருத்தேர் நடத்திவைத்தான்.

பின் புரூரவன் என்ற அரசன் கங்கா ஸ்நானம் செய்யவேண்டி தேரின் மேலேறி யாத்திரையாகச் செல்லும் வழியில் கதம்ப முனிவரின் ஆசிரமத்துக்கருகில் அவ் வரசன் தேர்மேல் செல்லமுடியாதபடி தடுக்கப்பட்டது. அவ்வரசன் இறங்கிக் கதம்ப முனிவரையும் விமானத்தையும் கண்டு வியப்படைந்து, அம் முனிவரின் விருப்பப்படி இந்த ஸ்தலத்தில் அக்கிரஹாரம் உண்டுபண்ணுவதாக வாக்களித்து, கங்கைக் கரையை அடைந்து, அங்குள்ள பாகவதர்களான ஆயிரத்து ஐநூறு பேர்களை அழைத்துக்கொண்டு வந்து நகர் அமைத்தான்.

சந்திர வம்சத்திலுதித்த "புண்ணியசிதி" என்ற ராஜன் தீர்த்த யாத்திரையாக பல ஸ்தலங்களுக்குச் சென்று, இந்த க்ஷேத்திரத்துக்கு வந்து ஸ்ரீ கோஷ்டீநாதனைச் சேவித்து, தளத்தை அலங்கரித்து விமானத்தையும் கோபுரத்தையும் சீர் திருத்தி, உத்சவத்திற்காக லீலா மண்டபமும் கட்டி, பிரம்மோத்ஸவமும் நித்தியோத்ஸவமும் நடத்தி வைத்தான்.

சரித்திர வரலாறு.

ஸ்ரீ வைஷ்ணவ தர்சன ஸ்தாபகுசாரியாரான ஸ்ரீ இராமாநுஜாசாரியார் காலம் சுமார் 800 ஆண்டுகட்கு முன் என்பர். இவர் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் பதினெட்டு முறை எழுந்தருளி இறுதியில் நம்பியால் திருமந்திரார்த்தத்தை உபதேசிக்கப்பெற்ருர். ஒருவருக்கும் சொல்லக்கூடாது என்ற நம்பியின் ஆணையை மீறி ஆசையுடையோர்க்கெல்லாம் இவ்வரும் பொருளை வழங்கினர். நம்பிகள் "இது அடுக்குமோ ?" என. இராமானுஜர் "ஆசார்யார் சொல்லைத் தடுத்ததாலுண்டான நரகம் என்னெருவனுக்கானல், இந்த மந்திரார்த்தத்தைக் கேட்ட அநேக ஆத்மாக்கள் மோக்ஷமடைக" என்று பணிவாகப் பதில் உரைத்தார், நம்பியும் மனமுருகி இராமானுஜனை "எம்பெருமானரே" என்று கட்டித் தழுவி ஆசிர்வதித்தார்.

கோயிலின் அமைப்பு, சிறப்பு, நடப்பு :

திருக்கோட்டியூர் என்ற இவ்வூரின் பெயர் (1) திருக்கு – ஒட்டி – ஊர் எனப் பிரித்து "பிறவியில் செய்த பாவங்களை நீக்கும் எம்பெருமான் கோயில் கொண்டுள்ள ஸ்தலம்" எனவும். (2) 'கோட்டம்' என்ருல் 'கோவில்' என கோவிலையும் விமானத்தையும் கொண்ட ஊர் எனவும். (3) 'கோஷ்டி' என்ருல் வித்துவான் கூட்டம் என வித்வத் கோஷ்டி நிறைந்திருக்கும் ஊர் எனவும் உணர்த்தும்.

இவ்வூர் சிவகெங்கையிலிருந்து திருப்பத்தூர் போகும் சாலையில் 16 மைல் தூரத்திலுள்ளது. கோவிலின் முன்பு திருப்பாற்கடலும், வடகிழக்கில் நடுமண்டபத்தோடு கூடிய தெப்பக்குளமும், தென்

மேற்கில் ஐயனூர் சிவகெங்கையும், வடக்கே திருப்பாற்கடலும் காவடிக்குளமும் உள்ளன நாற்புறமும் எண்ணற்ற பாசானக் கண்மாய்கள் இருக்கின்றனவாதலால் நல்ல நீர்வளம் நிலவளம் பெற்றது.

நெடுந்தூரம் வரை தெரியக்கூடிய திருக்கோபுரத்துடனும், அட்டாங்க விமானத்துடனும் திருக்கோவில் திகழ்கின்றது. இதன் கிழமேல் நீளம் 472 அடி, தென்வடல் 270 அடி, கோயிலின் தலைவாசலில் இராஜகோபுரம் 85 அடி உயரமாயிருக்கிறது. இதன் அடிவாரம் கிழமேல் 40 அடி. தென்வடல் 50 அடி, திருவாசல் 10 அடி, கோயிலின் முதன்மையான பகுதி அட்டாங்க விமானமே! இது 96 அடி உயரமுள்ளது. இதனுச்சியிலுள்ள தங்கக் கலசம் 5 அடி உயரமும் 6¾ அடி சுற்றளவும் உள்ளது இந்த விமானத்தின் புதுமை என்னவெனில், இதன் நிழல் எப்போழ்தும் தரையில் விழாது. இவ்வாறு தஞ்சாவூர் கோபுரம் அமைந்திருக்கிறது. மூலைக்கு இரண்டாக நான்கு மூலைகளிலும் எட்டு விமானங்கள் அமைந்திருத்தலினாலே இது அட்டாங்க விமானம் என்று பெயர் பெற்றது. மேல்தளத்தில் எட்டுத் திசைகளிலும் திசைக்கொன்றாக எட்டு விமானங்கள் இருப்பது காணலாம். எட்டு விமானங்களும் திருமால் மந்திரமாகிய எட்டெழுத்துப் போலும், நடுவிலே அமைந்த உச்சி பிரணவம் போலும் அமைந்துள்ளன. இந்த விமானம் ஒன்றின்மேல் ஒன்றாக 3 தளங்களை உடையது.

மேல்தளம் 'பரமபதம்' என்னும் பெயர் பெறும். இதுவே வைகுண்டம். இங்கு எழுந்தருளியிருப்பது பரமபத நாதன். இருபுறமும் ஸ்ரீ தேவி பூதேவிகள் இருக்கின்றனர். இருந்த திருக்கோலம் பெருமான் இருப்பது. மூன்று புறமும் சுவற்றில் சித்திரங்கள் தீட்டப்பெற்றுள்ளன. அவை நித்திய சூரிகள், முத்தியடைந்தவர்கள். ஆழ்வாராதியர், தேவர், முனிவர்கள், திருப்பாற்கடல் திருமணிமுக்தா நதி, தசாவதாரம் என்பன. முன் வாசலின் மேலே சித்திரத்தால், இவ்வூரில் உடல் நீப்பவர் அடையும்பேறு விளக்கப் பெற்றுள்வது. முக்தியடைந்த ஆன்மாவை தேவர்கள் விமானத்தில் அழைத்துச் செல்வர். விரஜா நதியில் மூழ்கியவுடன் சூட்சும ரூபம் நீங்கப்பெற்று, நித்திய சூரிகளாக மாறி, பரமபத நாதனைப்போலே சங்குசக்ரதாரிகளாக மாறுகின்றனர்,

இம் மேல்தளம் உட்சுற்று. வெளிச்சுற்று என இரண்டு சுற்றுக்களையுடையது. தெற்கு வெளிச்சுற்றில் நடுவே தெற்கே பார்த்த நிலையில் உடையவர் (இராமாநுஜர்) சிகையுடனும், உபதேச முத்திரையுடனும், திருமந்திரார்த்த உபதேசம் செய்த பாவனையில் எழுந்தருளியிருக்கின்றார்.

நடுத்தளம் :

இங்கே 'நின்ற நாராயணன்' பெருமாள் ஸ்ரீ தேவி பூதேவிகளுடன் இருக்கின்றார். இது இந்திரலோகம். இப் பெருமான் 'நின்ற நம்பி' என்றும், 'உபேந்திரன்' என்றும் பெயர் பெறுவர். எழு முனிவர்களும், தேவர்களும் சித்திரங்களில் எழுதப்பெற்றுள்ளனர். இத் தளமும் உட்சுற்று வெளிச்சுற்றுகளுடனும் நான்கு புறமும் வாசலோடு விளங்குகிறது. இங்கேதான் மூலைக்கு இரண்டாக உள்ள எட்டு விமானங்களின் உட்கூடு தெரிகிறது.

முதல் தளம் :

இங்கு இருக்கும் பெருமான் திருப்பாற்கடல் நாதன், இவரே மூலவர். திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமாள் இவரை 'உரகமெல்லணையான்' என்று பெரியாழ்வார் மங்களாசாஸனம் பண்ணுகிறார். வடமொழியில் "பன்னகமிருது சர்ப்பசாயி" எனப் படுவர். இவர் பள்ளிகொண்டிருக்கும் பாற்கடல் வெண்மை நிறமானது. அதன்மேல் இவருக்கு படுக்கையாக இருக்கும் ஐந்து தலை ஆதிசேடன் தங்க நிறமானது, பாம்பின்மேல் பள்ளிகொண்டிருப்பவர் நீல மணிபோன்றவர்.

பஞ்சபேரும் இத் தளத்தில் எழுந்தருளியிருக்கின்றனர். அவர்களாவன : (1) மூலவர் – திருப்பாற்கடல் நாதன், 'உரகமெல்லணையான்' என்று மங்களாசாஸனம் செய்யப்பெற்றவர். (2) திருவிழா நாயகர் (உற்சவர்) சௌமியநாராயணன், மாதவன் என்றும் பெயர் பெறுவார். திருமங்கை ஆழ்வார் இவரை 'வெள்ளியான் கரியான்' என்றும், திருமாமகளுக்கு (ஸ்ரீதேவிக்கு) இனியான்' எனவும், 'குலமாமகளுக்கு (நீளாதேவி என்ற நப்பின்னைப்பிராட்டிக்கு) இனியான் 'நிலமாமகளுக்கு (பூதேவிக்கு) இனியான்' என்றும் மங்களாசாஸனம் செய்கிறார். (3) திருமஞ்சன மூர்த்தி: திருமங்கை

ஆழ்வார் நாடோறும் திருமஞ்சனமாகும் இம் மூர்த்தியை ‘தேவ தேவ பிரான்’ என்று பாடியிருக்கிறார். (4) ஸித்யோத்ஸவர் (பலி பேரர்): இவரை பெரியாழ்வார் ‘குளிர்ந்துறைகின்ற கோவிந்தன்’ என்று பாடுகிறார். (5) யாகபேரர் (வேள்விமூர்த்தி) இவரைப் பெரியாழ்வார் ‘நரகநாசன்’ என்று மங்களாசாஸனம் செய்கிறார்.

காளிங்க நடன கிருஷ்ணனும், ஊஞ்சலில் சந்தான கிருஷ்ணனும், இப் பஞ்சபேரருடன் எழுந்தருளியுள்ளார்கள். இம் மாடியில் தெற்கே கதம்ப முனியும், மேற்கே நான்முகனும், கலைமகளும் தேவர்களும், வடக்கே மதுகைடபர்களும், தேவேந்திரனும், புரூர்வ சக்கிரவர்த்தியும் இருக்கின்றார்கள். இம் முதல் தளத்தின் முன் மண்டபம் (திருமாமணி மண்டபம்) மிக்க அழகானது திரு வாயில் காவலரும், முன்னால் கருடாழ்வாரும் உள்ளார்கள்.

விமானத்தின் அடிவாரத்தின் கிழக்கே கண்ணனும். தெற்கே நரசிங்கமூர்த்தியும், வடக்கே இராமபிரானும் கோயில்கொண்டிருக்கின்றனர். நரசிங்க மூர்த்தியின் திருமுன்புதான் திருக்கோட்டியூர் நம்பிகள் இராமானுஜருக்குப் பதினேழுதடவை மறுத்து பதினெட்டாவது தடவை இசைந்து திருமந்திரார்த்தத்தை உபதேசித்தது.

விமானத்துக்குத் தெற்கே தாயார் சந்நிதி. தாயாருக்கு சீதேவி (ஸ்ரீதேவி) திருமாமகள் என்பன பெயர்கள். வடமொழியில் "மஹா ஸ்வாமினீ" என்றும் திருநாமம். வடக்கே ஆண்டாள் சந்நிதி, சுவர்க்க வாசல் இவை உள்ளன. யாகசாலையும், சேனைமுதலியார் சந்நிதியும் வடகிழக்கேயுள்ளன.

விமானத்தின் முன்புள்ள மணிவாசலைத் தாண்டி வந்தால், முன்னால் சரபேசுவரர் கோயிலும், வடக்குப்புறத்தில் யோக நரசிம்மர் சந்நிதியுடன் உற்சவ மண்டபமும், வாஹன அறையும் இருக்கின்றன.

ஸ்ரீ சரபேசர் சுயம்புலிங்க மூர்த்தி. தாமே முளைத்தெழுந்தவர். உளிபடாத திருமேனி. இரண்டு துண்டாக வெட்டப்பட்டவாக எழுந்தருளியிருக்கிறார். இவருடைய கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், பிள்ளையார், சுப்ரமணியர், சனகாதி நால்வர் உள்ள மகா

மண்டபம், அதின் முன் மணிமண்டபமும் அதில் நந்தியும் சுற்றில் கன்னிப்பிள்ளையாரும் இருப்பது கண்டு வணங்கி அருள்பெற யாவரையும் தூண்டுகிறது. திருமால் நரசிங்கராக வந்தபோது சிவபெருமான் சரபேசராக வந்தமைக்கு இது அறிகுறி போலும்!

நந்தியின் முன் கருங்கல் மண்டபமும், இதன்முன் கொடிமரமும், பலிபீடமும் அதன்முன் ஏகாதசிக் கொட்டகையும் இருக்கின்றன. (இப்போதுள்ள ஏகாதசிக் கொட்டகை ஒரு தனவந்தரால் திறம்படக் கட்டப்பட்டுள்ளது) கொட்டகைக்குத் தென்புறம் ஆசிரியராகிய திருக்கோட்டியூர் நம்பிகளுக்கும், அவர் மாணாக்கராகிய உடையவருக்கும் கோயில்கள் உள்ளன.

பரமபத வாசலின் வெளிப்பக்கத்தில் (வடக்கு வெளி பிரகாரத்தில்) நரசிங்கமூர்த்தி இரணியனோடு போரிடும் கோலமும் போரிட்டுக் கொல்லும் கோலமும் ஆக இரண்டு மிக்க கோர உருவங்கள் இருக்கின்றன. அவை கண்டவர் நெஞ்சம் திடுக்கிடச் செய்யும் தன்மையன. இவைகளில் முற்காலத்தில். போரிடும் மூர்த்தி விமானத்தின் தென்புறமுள்ள நரசிங்கன் சந்நிதியிலும், சங்கார மூர்த்தி இராமபிரான் சந்நிதியிலும் வைக்கப்பெற்றிருந்தன. அவைகளின் கோர உருவத்தைக்கண்டு, மக்கள் அஞ்சவே, அவைகள் அப்புறப்படுத்தப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டன.

இக் கோயிலில் சிற்பச் சிறப்புகள் மிகுதி. எட்டுக் கைகளுடன் நரசிங்கமூர்த்தி சண்டைக்கோலமும், இரணியனை வதம் செய்யும் கோலமும் அருமையான வேலைப்பாட்டுடன் இருக்கின்றன. அஷ்டாங்க விமானம் மூன்று தளங்களிலும் உள்ள அருமையான உருவங்களும் சித்திரங்களும் பார்க்கத்தக்கன. சிங்கம் சுமந்த கொடுங் கைகளோடு கூடிய மிகப் பழைய கோயில் இது புராதனக் கல்வெட்டுகளும் பல உள.

தேர், திருவிழா, தெப்பம் உண்டு. ஏறத்தாழ பன்னிரண்டு மாதமும் திருவிழாக்கள் நடைபெறும். பெருமாள் சித்திரைத் தேரும், திருக்கோட்டியூர் நம்பிகளுக்கு வைகாசித் தேரும், ஆண்டாளுக்குத் திரு ஆடிப்பூரத் தேரும் உள்ளன. பித்தளைத் தகட்டில் தங்கமுலாம் பூசிய கருடனும், குதிரையும், தங்கத்

தோளுக்கினியான். வெள்ளித் தோளுக்கினியான். வெள்ளி யானை, தந்தப் பல்லக்கு. மரத்திலுல் யானை, அன்னம், சிங்கம், ஆதிசேடன், அனுமார், யாளியும் இரண்டு கேடயங்களும், நம்பிகள் குதிரையும் தோளுக்கினியானும், ஊஞ்சல் பல்லக்கும், ஆழ்வார் பல்லக்கும் செல்வர் பல்லக்கும், ஆகிய வாகனங்கள் உண்டு.

சித்திரை மாதத்தில் — பெருமாளுக்கு சித்திரை நாளில் தேர் விழா பத்துநாள் திருவிழா.

வைகாசி மாதம் — கஜேந்திர முக்தி விழா, பூரணை முக்கியம் பத்துநாள் விழா. வைகாசி மாதம் ரோகிணியில் நம்பிகளுக்கு 10நாள் திருநக்ஷத்திர விழா. திருத்தேர் ஒன்பதாம் நாள்.

ஆடி மாதம்—ஆண்டாளுக்கு பூரத்தில் தேர். பத்துநாள் விழா.

ஆவணி மாதம் — திருப்பவித்ர விழா, கண்ணன் பிறப்பு.

புரட்டாசி மாதம் — நவராத்திரி விழா.

ஐப்பசி மாதம் — ஊஞ்சல் விழா. மணவாளமாமுனி பத்துநாள்.

கார்த்திகை மாதம்—திருக் கார்த்திகை-கைசிகம்-திருக்கோட்டியூர் நம்பிகளுக்கு பெரிய தேர்.

மார்கழி மாதம் — பகல் பத்து, இராப்பத்து, திருப்பள்ளி எழுச்சி.

தைமாதம்—ஆண்டாளுக்கு தைலக்காப்பு விழா. பூரணையன்று எட்டாம் நாள் திருக்கல்யாணம்.

மாசி மாதம்—பூரணையன்று தெப்ப விழா.

பங்குனி மாதம்—உத்திர விழா, தாயாருக்குப் பத்துநாள் விழா.

திருமணிமுத்தாற்றில் ஆண்டுதோறும் தீர்த்தவாரி நடைபெறும்.

இக் கோயில் திருவாகம் வழிவழியாகத் தெய்வபக்தியில் சிறந்து வரும் சிவகெங்கை மன்னர்களால் நன்கு நடைபெற்று வருகிறது. அவர்களே பரம்பரைத் தருமகர்த்தாக்கள் ஆவர். அத் தருமகர்த்தாவின் ஆதீனம் சிவகெங்கை தேவஸ்தானம் பரிபாலனத்திலுள்ள கோயில்களில் இது ஒன்று. மெய்யன்பர் பலரால் ஏற்று நடத்தப்

பெறும் திருப்பணிகளும், கட்டளைகளும், விழாக்களும் உண்டு. தினமும் ஆறுகால பூஜை. கோயிலுக்கு மானிப நிலங்கள் சொத்துக்கள் யாவும் உள்ளன.

கோட்டிக் கலம்பகம், பிள்ளைத்தமிழ், முதலிய இலக்கியங்களால் புகழ்பெற்றது. ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்றதும், திருமந்திரப்பொருளை உடையவர் எல்லோரும் ஒக்க உபதேசித்தருளிய ஸ்தலம் இது என்ற முறையில் இவ்வூருக்குப் பெருமதிப்பு உண்டு. நாற்புறங்களிலிருந்தும், மக்கள் நாளும், கூட்டம் கூட்டமாக வந்து வழிபட்டுப் போவர். சனிக்கிழமை தோறும் வரும் மக்கள் கூட்டம் சிறப்பைத் தரும்.

இங்ஙனம் தலம், தீர்த்தம், மூர்த்தி என்பவற்றால் உள்ள பழம் பெருமையுடையதுமல்லாமல், சைவ வைணவ ஒற்றுமைக்கு நிலைக்களனாகவும் விளங்குகின்றது இத் தலம். இத தலத்தை வழிபட்டு பயன்பெறுவது நம்மவர் மக்கள் கடன்.

சுபம்.

திருக்கோட்டியூர் நம்பிகள் வரலாறு.

(R. ரெங்கராஜன், B. A., B. T.,)

ஸ்வாமி எம்பெருமானாரைப் "பஞ்சாசார்ய பதாச்ரித:" என்று பெரியோர் அழைப்பர். எம்பெருமானாருக்குத் திருக்கோட்டியூர் நம்பிகளும் ஒரு ஆசாரியன் என்பதை உலகமறியும். நம்பிகளின் வடமொழித் திருநாமம் "கோஷ்டீ பூர்ணர்" என்பது. "கோஷ்டீ பூர்ணகுருபஸத்தி குசலோ யாம் சச்வதாஸேதிவாத்" என்று பட்டர் அருளிச் செய்துள்ளார். நம்பி என்றால் இனிய நற்குணங்கள் நிறையப் பெற்றவர் என்பது பொருள். இத் திருக்கோட்டி நம்பியும் சாந்தமும் இனிமையும் நிறையப் பெற்றவர். இவர்தம் வரலாற்றினை "குருபரம்பராப்ரபாவம்" என்ற நூல் கூறுகின்றது. ஸ்ரீ வசந பூஷண வியாக்கியானம், முமுக்ஷுப்படி வியாக்கியானம் முதலியவற்றில் மணவாளமாமுனிகளும், திவ்யப்ரபந்த வ்யாக்கியானங்களில் அவற்றின் ஆசிரியர்களும், நம்பி வைபவத்தின் சில நிகழ்ச்சிகளைக் குறித்துள்ளனர். ஸ்வாமி தேசிகனும் தாம் பணித்த குருபரம்பராஸாரத்தில்,

"எம்பெருமானுர் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீ பாதத்திலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தார்; திருமாலையாண்டான் ஸ்ரீ பாதத்திலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டருளினுர்; ஆளவந்தாராழ்வார் ஸ்ரீ பாதத்திலே திருவாய்மொழியும் ஓதி ஸ்தோத்ராதிகள் அருளிச் செய்யும் நல் வார்த்தைகளும் கேட்டருளினுர்; திருமலை நம்பி ஸ்ரீ பாதத்திலே ஸ்ரீமத் ராமாயணம் கேட்டருளினுர்" — என்று குறிப்பிடுகிருர்.

பெரிய நம்பி உடையவருக்குப் பரமப்ரீதியோடே ரஹஸ்யார்த்தங்களை அருளிச் செய்துவருங்கால், "இராமநுசா! திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே சில அர்த்த விசேஷங்கள் உண்டு. ஆளவந்தாரிடத்தில் நின்றும் தேக்கிவைத்திருக்கும் அவ்வரும் பொருள்களை அவரிடத்தே கேட்டு உய்யக்கடவீர்!" என்றுரைத்தார்.

இராமாநுசரும் அரும்பொருள் கேட்கும் வேட்கையினராய்த் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினுர்.

"நம்பி திருமாளிகை எது?" என்று ஊராரை வினவினர். "அதோ, தெரிகிறதே, கூரை அதுதான்." என்று திருமாளிகையைச் சுட்டிக்காட்டினர் ஊர் மக்கள். உடனே இராமாநுசரும் கீழே விழுந்து திருமாளிகையின் திசைநோக்கித் தொழுது எழுந்து மீண்டும் மீண்டும் தொழுது எழுந்து வணங்கிக்கொண்டே நம்பி திருமாளிகையை அணுகிச் சென்ருர். அவ்வூரார்க்கு அதுவரை நம்பியின் பெருமை தெரிந்திலது. நான்கு சாஸ்திரங்களிலும் ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த நம்பிகள் நீறுபூத்த நெருப்புப்போல் மிகவும் ஏகாந்த சீலராக அவ்வூரில் எழுந்தருளியிருந்தார். அவ்வூர் வைணவர்கள் இராமாநுசரை நோக்கி ஒருசமயம், "ஸ்வாமி! நாங்கள் இவ்வூரிலேயே வாழ்ந்தும், 'தண்டாமரையினுடன் பிறந்தே தண்டேன்நுகரா மண்டூகம்' என்ருப்போலே நம்பியிடத்துள்ள அருமைகளை அறிந்திலோம்; தேவரீரோ "வண்டே கானகத்திடைப் பிறந்தும் வந்தே கமலமது வுண்ணும்" என்ருப்போலே திருவரங்கத்தில் நின்றும் இங்கே வந்து நம்பியின் திருவருளினைப் பெறும் பாக்கியம் உடையீர்! தேவரீர்க்கு நம்பிபக்கல் நிதிகிடைத்தால் அதை எங்களுக்கும் வழங்கவேண்டும்' என்று வேண்டினர்.

ஸ்வாமி எம்பெருமானுர் நம்பி ஸ்ரீ பாதங்களிலே விழுந்து, "ஸ்வாமி! அடியேனுக்கு மகா வாக்கியோபதேசம் செய்தருள வேணும்; பெரிய நம்பி செலுத்த அடியேன் தேவரீர் திருவடிவாரத்துள் வந்து நிற்கிறேன்," என்று கூப்பிய கையராய் விண்ணப்பம் செய்தார். நம்பியும் இவருடைய ஞானபரிபாகத்தை அளவிட விரும்பி வாளாவிருக்க, இராமாநுசரும் சிலநாள் காத்திருந்தும் எண்ணம் நிறைவேருது மீண்டும் திருவரங்கம் திரும்பினுர்.

பின்ஞெருநாள் நம்பி திருவரங்கம் சென்று அரவணையானைத் தொழுதெழத் தென்னரங்கனும் அவரை நோக்கி, "நம்பிகளே! எம்மிராமாநுசனிடத்தில் உமக்கு ஏன் இத்துணை அலட்சியம்? இரஹஸ்யங்களின் பொருளை அவருக்கு உபதேசம் செய்மின்" என்று ஆணையிட்டார்.

"ஸ்வாமி! உண்மைதான். வேறுவிதமாக ஆக்ஞாபித்ததும் தாங்கள்தானே? "ஒருவன் ஒருவருஷம் உன்னுடன் இருந்தபின்னரே நீ அவனைச் சிஷ்யனுக ஏற்றுக்கொண்டு உபதெசம் செய்ய வேண்டும். அவன் தன்னடக்கம் உள்ளவனு? ஆசாரியனிடத்தில் திரிகரணசுத்தியுடன் அடியோடு தன்னை அர்ப்பணம் செய்துகொண்டவனு? என்பதையும் அறியவேண்டும் என்று தரங்கள்தானே முன்னுரைத்துப்போந்தது?" — என்று நம்பிகள் கூறினுர்.

"நம்பிகளே! இராமாநுசனைச் சாதாரண சிஷ்யன் என்று நினைத்துவிடாதீர்! அவன் உலகை வாழ்விக்கப் பிறந்த வள்ளல்," என்று விடையிறுத்தார் நம்பெருமாள்.

இராமாநுசனின் அளவுகடந்த ஆர்த்தியை அறிந்த நம்பிகள் மனம் தேறி ஒரு வைணவரைக் கோயிலுக்குப் போகவிட்டார்.

தண்டும் பவித்ரமுமாகத் தாம் ஒருவரே வந்து கேட்டுப் போகும்படி நம்பி ஆணையிட்டார் என்று அவ் வைணவரே இராமாநுசரிடத்துக் கூறிநின்ருர். இராமாநுசர் உள்ளம் உவந்து கூரத்தாழ்வானையும், முதலியாண்டானையும் கூட்டிக்கொண்டு மிக விரைந்து திருக்கோட்டியூரேறச் சென்று நம்பி திருவடிகளில் தெண்டனிட்டுக்கிடக்க, நம்பியும், "தனித்தன்ருே உம்மை வரச் சொல்லியது? துணையிருவரைக் கூட்டிவந்ததேன்?" என்று வினவினுர்.

"ஸ்வாமி! அடியேன் தனித்தே வந்துள்ளேன். இந்தத் தாசரதியே எனதுதண்டு: இந்த ஆழ்வானே எனது கமண்டலம்." என்று மிக்க பணிவோடு கூறினர் இராமாநுசர்.

நம்பியும் இராமாநுசர் தமது சீடர்களின்மீது கொண்ட அன்பின் பெருக்கினைக் கண்டு வியந்து, "நல்லது, இவ்வரும்பொருள் உங்கள் மூவர் அளவிலே நிற்கட்டும், மற்றொருவர்க்கும் சொல்லாதே கொள்ளும்" என்று இராமாநுசரிடம் சபதம் பெற்றுத் தனித்த தோர் இடம் சென்றமர்ந்து பெரிய திருமந்திரம் என்று சிறப்பிக்கப் பெறும் திருவெட்டெழுத்தான 'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரத்தின் உட்பொருளை உபதேசித்தருளினர்.

பெருதற்கரிய நிதியைப் பெற்ற இராமாநுசர் பரவசமடைந்தார்: தாம் பெற்றபேறு இவ் வையகம் பெற்றுய்யவேண்டும் என விரும்பினர். ஓராண் வழியாக வந்த உபதேச நெறியினை மாற்ற நினைத்தார். ஆசையுடையோர் அனைவருக்கும் தாம் கேட்ட அரும்பொருளை அள்ளிக்கொடுக்க விரைந்தார், மறுநாளே உரகமெல்லணையான் திருமுன்பே சென்று, "ஆசையுடையீர்! வம்மின்! கொண்மின் அரும்பொருளை!" என்றழைத்தார். வைணவத்திரள் கூடியது: திருவெட்டெழுத்தை உரக்கக் கூறி உபதேசம் செய்து மூடிவைத்த பொருளை வெளியிட்டு மகிழ்ந்தார்.

இந்நிகழ்ச்சியைச் செவியுற்ற நம்பிகள் திடுக்குற்றார். "திருவெட்டெழுத்துத் தெருவிலே உரைக்கத்தகும் மந்திரமா? தகுதி பாராது அனைவர்க்கும் அதைக் கூறலாமா?" என்று சிந்தனை ஓடி கோயிலை நோக்கி விரைந்தார்.

சாந்தமான முகத்துடன் புன்முறுவல் தோற்ற எதிர்வந்து வணங்கினர் இராமாநுசர். அவரை முடிபிடித்தெடுத்த நம்பி கேட்டார்:

"பாரினில் ஒருவர்க்கிந்த உண்மையை பகரேன் என்ன
நீர் எனை ஆணையிட்டு நீங்கினீர் அதனைப் பாராது
ஊரவர்க் கெல்லாங் கூறி உமக்கும் என்பெற்றீர்?"

ஆசாரியன் சொல்லை மீறியதற்குப் பலன் என்னவென்று இராமாநுசருக்குத் தெரியும்.

"பொன்றலில் நரகம் பெற்றேன், புனிதனே!" — கண்ணீர் மல்கப் பதிலுரைத்தார் இராமாநுசர். பலர் நலத்திற்காகத் தந்நலம் துறப்பவனே மனிதருள் மாணிக்கம்: அவன் கோடியில் ஒருவன்: அவ்வொருவனே நம்மிராமாநுசன்.

"நான் ஒருவனே அன்றோ நசிப்பது இத்திரள் எல்லாம்
ஆனவான் பேரின்பத்தை அருந்துமே, அந்தோ?"

இது இராமாநுசன் கூறிய விளக்கம். நம்பிகள் இதைக் கேட்டுக் கண்ணீர் உகுத்து இராமாநுசனை மார்புறத் தழுவி,

உடலும் தூய சிந்தையும் அழுந்தப்புல்லி
ஒன்றிய அன்பினாலே உச்சியை வளைத்து மோந்து
"நன்று நன்று அன்ப! உன்னை நானிலத்து எவர்கள் ஒப்பார்?"
தன்னுயிர் தன்னைக்கொண்டு தான்பிழைத்திடுவதன்றி
மன்னுயிர்க் கிரங்கித்தன்னை மைந்தனே! மாய்க்கப்புக்கார்
இந்நிலத்தில்லை! இல்லை! எழுலகத்தும் இல்லை!"

என்று பலவாறு நா தழுதழுக்கக்கூறி, "எம்பெருமானாரே!" என்று இராமாநுசரை விளித்து அணைத்துக்கொண்டார். அன்று முதல் உலகம் முழுதும் எம்பெருமானார் என்றே இராமாநுசரை அழைக்கத் தொடங்கின.

சரம சுலோகத்தின் உட்பொருளையும் இராமாநுசருக்கு வழங்க வேண்டும் என்று விரும்பினார் நம்பிகள். சின்னாட்கள் கழித்து மீண்டும் இராமாநுசர் நம்பி திருவடிகளில் வந்து தெண்டனிட்டார். நம்பியும் பகவத்கீதையின் சரம சுலோகத்தில் அடங்கியுள்ள இரகஸ்யங்களை எடுத்துரைத்தார். கோயில் திரும்பின இராமாநுசரை ஆழ்வான் அணுகி, 'ஸ்வாமி! எனக்குச் சரமசுலோகப் பொருளை உபதேசம் செய்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். ஸ்ரீவத்ஸாங்கருக்கு இந்த சுலோகத்தின் பொருளை உபதேசிக்க நம்பிகளிடம் முன்னரே அனுமதிபெற்றுவைத்திருந்தார் இராமாநுசர். ஓராண்டுகாலம் ஆசாரியன் பக்கலிலே இருந்த பின்னரே உட்பொருளை அறியத்தகும் என்பது நம்பிகளின் ஆணை. ஆசாரியன் திருமுன்னர் ஒருமாதம் பட்டினி கிடந்தால் ஓராண்டு காலம் ஆசாரியன் பக்கலில் பணிவிடை செய்ததற்குச் சமம் என்ற சாஸ்திர

விதியை நினைந்த ஸ்ரீ வத்ஸாங்கர் இராமாநுசன் மடத்திலே ஒருமாதம் உண்ணு நோன்பு இருந்து அர்த்த விசேஷங்களை உபதேசம் செய்யப் பெற்றார். இதையறிந்த ஆண்டானும் நம்பி பக்கலிலே சென்று ஆறுமாதம் காத்திருந்தார். அவர் ஆண்டானைப் பார்த்து, "நீ உனது வித்யாகங்காரத்தை ஒழித்துவிடு. நான் தனவான் என்ற எண்ணத்தை நீக்கிவிடு. நான் உயர்குலத்தில் பிறந்தவன் என்ற செருக்கைக் களைந்துவிடு. பின்னர் எம்பெருமானே உனக்குச் சரம சுலோகத்தின் பொருளை போதிப்பர்" என்று கூறி ஆண்டானுடைய சிரசைத் தமது திருவடிகளால் ஸ்பர்சித்து "ஏக்கமுருதே!" என்று சொல்லி அனுப்பிவைத்தார்.

நம்பிகளின் வைபவத்தைக் கூறுவதில் சில நூல்கள் வேறுபடுகின்றன. பதினெட்டுத்தடவை இராமாநுசரை வரச்செய்தது படிப்படியாக அவரை திருமந்திரத்திற்குத் தக்க அதிகாரிபுருஷனாக மாற்றிவிடவே என்று சிலர் கூறுவர். ஒவ்வொரு முறை இராமாநுசன் வந்ததும் ஒரு அரும் கருத்தை உணர்த்தினார் என்றும் கூறுவர். பதினெட்டு முறை கூறிய கருத்தின் தொகுதியினைத் "**திருக்கோட்டியூர் நம்பிகள் பதினெட்டு வார்த்தை**" என்றழைக்கின்றனர்.

இராமாநுசரை உலகம் போற்றும் உத்தமனாக உருவாக்கிய பெருமை நம்பிகளைச் சார்ந்தது. பெரிய திருமந்திரமும் சரம சுலோகமும் ஸ்ரீ வைஷ்ணவனுக்கு கண்ணனைய மந்திரங்கள். அவற்றை உபதேசித்து இராமாநுசனுக்கு ஆசாரியன் ஆனார் நம்பிகள். நம்பிகள் அருமைப்படுத்தி உபதேசித்த காரணத்தை மணவாள மாமுனிகள் முமுக்ஷுப்படி வியாக்யானத்தில் சரமசுலோகப்ரகரணத்தின் அவதாரிகையில் கூறுகிறார்:— "இதின் அர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் எழுந்தருளிற்று. நம்பி தாமும் இதிய் அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரிகள் இல்லாமையையும் பார்த்திறே இவருடைய ஆஸ்திகயாதர பரீக்ஷார்த்தமாகவும் பலகால் நடந்து துவளப்பண்ணிச் சூளுறவுகொண்டு மாஸோபவாஸங் கொண்டு அருமைப்படுத்தி அருளிச்செய்தருளிற்று ..."

x x x

சில நாளைக்குப் பின்பு நம்பிகள் கோயிலுக்கெழுந்தருளி இராமாநுசனை திருமலையாண்டானிடத்தே காட்டிக் கொடுத்து இவர் பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேளும் என்று நியமித்தார் திருமாலை ஆண்டானும் ஆளவந்தார் திருவடிகளிலே கேட்ட அர்த்தங்களை அருளிச்செய்து வருகையில் எம்பெருமானுர் ஆங்காங்குச் சில ஆழ்பொருளைப் பணித்துவர, இதனால் திருவுள்ளம் புண்பட்ட ஆண்டான் இடையிலே பாடம் சொல்வதை நிறுத்திவிட்டார். இதையறிந்த திருக்கோட்டியூர் நம்பி கோயிலேற வந்து ஆண்டானை விசாரிக்கையில் அவர் எம்பெருமானுர் சொன்ன சில மாறு பொருள்களை எடுத்துரைத்து மனம் நொந்து நிற்க. அப்போது நம்பி அவரை நோக்கி, "இவ்வர்த்தமும் ஆளவந்தார் கூறக் கேட்டிருக்கிறோம்; ஸாந்தீபனி பக்கலிலே க்ருஷ்ணன் வேதமோதினுப்போலே காணும் உம்மிடத்தில் உடையவர் திருவாய்மொழி கேட்கிறதும்; ஆளவந்தார் திருவுள்ளத்திலுள்ள அர்த்தமொழிய இவர்க்கு வேறொன்றும் தோன்றாது காணும்." என்று கூறினர்.

பிறகு நம்பி உடையவர் மடத்தேற எழுந்தருள, எம்பெருமானுரும் உள்ளம் பூரித்து நிற்க, நம்பி ஆண்டானை மீண்டும் விட்ட இடம் தொடங்கித் திருவாய்மொழிக்கு அர்த்தம் அருளிச்செய்யும்படி நியமித்தார்.


x x x

எம்பெருமானுரிடத்தே பகைமைபூண்ட சிலர் அவர்க்கு விஷம் கலந்த அன்னமிட, அதை உணர்ந்த உடையவர் அவ்வுணவைத் திருக்காவேரியிலே கரைத்திட்டு உபவாஸமாக எழுந்தருளியிருந்தார். இதைத் திருக்கோட்டியூர் நம்பி கேட்டருளி அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளினர்.


நம்பியின் வருகைகையைக் கேள்விப்பட்ட இராமாநுசர் தம் சிஷ்யர்களுடன் காவிரியிலே கொதிக்கின்ற மணலிலே வந்து நின்றார்; நம்பியின் திருவடிகளிலே விழுந்து அவராக எழுந்திருக்கச் சொல்லும் வரையில் எழாது கிடந்தார். நம்பியோ எழுந்திரு என்று சொல்லாது மௌனமாயிருந்துவிட்டார். சிஷ்யர்களுக்கு தாங்கொணுக் கோபம் வந்தது. கிடாம்பியாச்சான் என்பவர் மனம் வெம்பி, "ஸ்வாமி! கொதிக்கின்ற மணலிலே சிஷ்யன் உடலை வெந்து மாளப்பண்ணும் நீரோ அன்புபொருந்திய ஆசாரியன்?" என்று



திருக்கோஷ்டியூர் நம்பிகள்



உடையவர்



நம்பிகள் திருமாளிகை

கோபத்துடன் கேட்டுவிட்டார். நம்பியும் புன்னகை புரிந்து சொன்னார்: "அன்பற்ற நெஞ்சன் என்று நினைத்துவிட்டீர் போலும்! தம் உயிரினும் அதிகமாக இராமாநுசனிடத்தில் அன்பு செலுத்துபவர்கள் எவரேனும் உளரோ? என்று சோதிக்க விரும்பினேன். இன்றுமுதல் நீரே இராமாநுசனுக்கு வேண்டிய உணவுப் பொருளைத் தயாரித்து அளிக்கவேண்டும்" என்று கூறி எம்பெருமானாரையும் பிக்ஷை வேண்டாம் என்று தடுத்து மடத்திலேயே உணவு கொள்ளும்படி நியமித்து மீண்டெழுந்தருளினார். அன்று முதலாக கிடாம்பியாச்சானே ஸ்வாமி திருவுள்ளத்திற்கேற்ற பரிசாரகனாக விளங்கினார்.

x x x

நம்பிகள் ஆழ்வார்கள் அருளிச் செயலைச் சிந்தித்திருப்பதே போதுபோக்காக வாழ்ந்தவர். திருவிருத்தம் 95-வது பாசுரத்தில் நம்பிபற்றிய நிகழ்ச்சியொன்று கூறப்படுகிறது. பட்டரும் நஞ்சீயரும் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருந்தபோது நஞ்சீயர் இராமாநுச தாசர் என்பார் ஒரு பாகவதருக்குத் திருவிருத்தத்தின் பொருளை ஒரு உரு அருளிச்செய்தார். அச் சமயம் நம்பியின் சிஷ்யர்களில் ஒருவராயிருந்த வளவன் பல்லவதரையர் என்பவரும் நஞ்சீயரின் விரிவுரையைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

யாதானுமோர் ஆக்கையில் புக்கு அங்காப்புண்டுமாப்பவிழ்ந்தும்
மூதாவியில் தடுமாறு முயிர்முன்னமே அதனால்
யாதானும் பற்றிநீங்கும் விரதத்தை நல்வீடு செய்யும்
மாதாவினைப் பிதுவைத் திருமாலை வணங்குவனே.

(*திருவிருத்தம் 95*)

என்ற பாசுரத்தின் பொருள் உரைத்தவளவிலே வளவரும் கண்ணும் கண்ணீருமாய் புளகாங்கிதமடைந்து மெய்மறந்து நின்றார். நஞ்சீயர் காரணம் வினவ, அவர் உரைத்தார், "நம்பி எனக்கு இதமான பொருள் அருளிச் செய்த பிறகு எம்பெருமான் திருமுன்பு இப் பாட்டை நாள்தோறும் விண்ணப்பஞ் செய் என்றருளிச் செய்தார். அத்தையிப்போது நினைத்தேன்." "அவர் இதற்கேதேனும் அரும் பொருள் உரைத்தது உண்டோ?" என்று கேட்க, வளவர், "எனக்கு அவை நினைவில்லை; ஆயினும் நம்பி இப் பாட்டைப் போர உகந்து ஆதரித்தனர்." என்று கூறினர். உடனே நஞ்சீயரும்

நம்பி ஆதரித்த பாட்டே என்று உகந்து இப் பாட்டை ஐந்தாறு நாழிகைப்போது கொண்டாடினுர்.

திருவிருத்தம் 99-வது பாசுரத்தின் வியாக்யானத்தில் காணப் படும் வரலாறு வருமாறு. பிரம்ம சூத்திரத்தில் ஒரு ஆழ் பொருளை எம்பெருமானுர்க்கு உபதேசிக்க விரும்பிய நம்பிகள், உடையவரைக் கோயிலின் பிராகாரத்தில் தனிமையான ஒரு இடத்திற்கு இட்டுச் செல்ல, அங்கு கோயில் திருப்பணி செய்வான் ஒருவன் உறங்கிக் குறட்டை விடாநிற்க அதைக் கண்டு வெறுப்புற்ற நம்பி திரும்பி விட்டார். பின்னர் ஒருமுறை இராமாநுசன் ஆழ்வான் அகத்திலே அமுது செய்திருக்கிற அளவிலே உச்சி வெய்யிலில் அகம் புகுந்து அவ் வர்த்த விசேஷத்தை இராமாநுசருக்கு அருளிச் செய்து, "எம்பெருமானுரே! அரும் பொருளை உமக்கு உபதேசித்தாலன்றி என்மனம் தரிக்காது" என்று கூறினராம்.

திருவாய்மொழி (7—10—11) 'தீர்த்தனுக்குற்றபின்' என்ற பாசுரத்தில் 'நல்கியுரைப்பர் தம் தேவியர்க்கே' என்ற சொற்றொட ரின் வியாக்யானத்தில் நம்பிகள் சரமசுலோகத்தை எம்பெருமா னுருக்கு உபதேசித்தது கூறப்படுகிறது. "அதாவது, உடையவர் திருக்கோட்டியூர் நம்பி தமக்கு அத்யந்த ரஹஸ்யமாக உபதேசித்த சரம ஸ்லோகத்தைத் தெற்காழ்வார் திருமுன்பே எடுத்துக் கைநீட்டி னவர்களுக்கு அவர்கள் விஷயத்திலே உகப்பாலே அருளிச் செய்தாரிறே."

ஆன்மா வேறு. உடல் வேறு, எம்பெருமான் ஆன்மாவினுள் ளும் உறைகின்ருன்; உடலினுள்ளும் உறைகின்ருன். இக் கருத் தினைத் தெளிவிக்கும் பிரமாணத்தைக் கேட்டு வாரும் என்று ஆழ்வானை திருக்கோட்டியூர் நம்பியினிடத்து அனுப்பிவைத்தார் இராமாநுசர். திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளிலே ஆறுமாதம் பணிவிடை செய்து நின்றவாறே, "ஆழ்வான்! ஆழ்வார் 'அடியே னுள்ளான்' என்றபடி கண்டாயே" என்ன ஆழ்வானும் மகிழ்ச்சி யுற்றுச் சென்ருராம்.

"அடியேன் உள்ளான் உடல் உள்ளான் அண்டத்து அகத்தான்
புறத்துள்ளான்
படியே இது என்றுரைக்கலாம் படியனல்லன் பரம்பரன்."

(*திருவாய்மொழி* 8-8-2)

திருக்கோட்டியூர் நம்பியின் புத்திரர் யாமுனரும் அருமைப் புத்திரி தேவகிப்பிராட்டியாரும் எம்பெருமானுர் சிஷ்யர்களாக விளங்கினர். யாமுனர் எழுபத்துநான்கு சிம்மாஸனுதிபதிகளில் ஒருவர்.

திருக்கோட்டியூர் நம்பிகளின் பரம்பரையினர் ஆழ்வார்கள் அருளிச்செயலாம் திவ்விய பிரபந்தங்களை அதிகரித்து இன்றும் எம்பெருமானைப் பண்ணுர் பாடலால் பாடித்துதித்துப் பணி புரிகின்றனர்.

திருக்கோட்டியூர் நம்பிகளுக்கு ஸந்நிதிப் பிரதிஷ்டை செய்து திருநாளும் ரதோற்சவமும் கொண்டாடுகின்றனர்.

திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளே சரணம்.

திருக்கோட்டியூர் நம்பி திரு அவதாரம் :
வைகாசியில் ரோஹிணி நக்ஷத்திரம்.

திருக்கோட்டியூர் நம்பிகள் அருளிய பதினெட்டு வார்த்தை.

1. மோக்ஷத்தில் இச்சையுடையவனுக்கு சமுசார வித்து நசிக்க வேண்டும்,

2. சமுசார வித்து நசித்தாலொழிய அகங்கார மமகாரங்கள் ஒழிய மாட்டா.

3. அகங்கார மமகாரங்கள் ஒழிந்தாலொழிய உடற்பற்றுப் போகாது.

4. உடற்பற்றுப் போனுலொழிய ஆன்ம ஞானம் பிறக்கமாட்டாது.

5. ஆன்ம ஞானம் பிறந்தாலொழிய செல்வம், போகம் இவற்றில் வெறுப்புப் பிறக்கமாட்டாது.

6. செல்வம், போகம் இவற்றில் வெறுப்புப் பிறந்தாலொழிய பகவானிடத்தில் பிரேமம் பிறக்கமாட்டாது.

7. பகவத் பிரேமம் பிறந்தாலொழிய ருசி நீங்காது.

8. விஷயாந்தர ருசி நீங்கினலொழிய பாரதந்திரியம் பிறக்கமாட்டாது.

9. பாரதந்திரியம் பிறந்தாலொழிய அர்த்த, காம, ராகத்துவேஷங்கள் நீங்கமாட்டா.

10. ராகத்துவேஷங்கள் நீங்கினலொழிய ஸ்ரீ வைஷ்ணவத்வம் கைகூடாது.

11. ஸ்ரீ வைஷ்ணவத்வம் கைகூடினலொழிய சாத்விக பரிக்ரகம் பிறக்கமாட்டாது.

12. சாத்விக பரிக்ரகம் பிறந்தாலொழிய பாகவத பரிக்ரகம் பிறக்கமாட்டாது.

13. பாகவத பரிக்ரகம் பிறந்தாலொழிய பகவத் பரிக்ரகம் பிறக்கமாட்டாது.

14. பகவத் பரிக்ரகம் பிறந்தாலொழிய அநந்ய ப்ரயோஜனன் ஆகமாட்டான்.

15. அநந்யப்ரயோஜனன் ஆகாதே அநந்யார்க சேஷபூதன் ஆகமாட்டான்.

16. அநந்யார்க சேஷபூதன் ஆகாதே அநந்ய சரணன் ஆகமாட்டான்.

17. அநந்ய சரணன் ஆகாதே அதிகாரி புருஷன் ஆகமாட்டான்.

18. அதிகாரி புருஷன் ஆனவனுக்கே திருமந்திரார்த்தம் கைகூடும்.

செல்வ நம்பியும், திருக்கோட்டியூரும்

(R. ரெங்கராஜன் B. A., B. T.,)

பெரியாழ்வாரின் முதல் நூலான திருப்பல்லாண்டு நாலாயிர திவ்யப்பிரபந்தத்திற்கு ஓர் நுழைவு வாயில். . இதன் பெருமையினை,

உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்போர் கலைதான் ?
உண்டோ பெரியாழ்வார்க்கு ஒப்பொருவர் ? — தண்தமிழ் நூல்
செய்தருளும் ஆழ்வார்கள் தம்மில் அவர்செய்கலையில்
பைதல் நெஞ்சே ! நீ உணர்ந்து பார்.

என்று ஸ்ரீ மணவாளமாமுனிகள் கூறுகின்றார். எம்பெருமானுக்குக் கண்ணெச்சில் கழிப்பதற்காகப் பெரியாழ்வார் பரிந்துபாடிய மங்களா சாசனமே திருப்பல்லாண்டு.

நாலாயிரத்துள்ளும் திவ்ய தேசங்களைப் பேசாத நூல் ஒன்றுமே இல்லை என்னலாம். இத் திருப்பல்லாண்டில் பெரியாழ்வார் திருக் கோட்டியூரையும் அதன்கண் உறைந்த செல்வநம்பி என்ற பரம பாகவதோத்தமரையும் குறிப்பிடுகிறார்.

எம்பெருமானைவிட அவன் எழுந்தருளியிருக்கும் நிலம் பெருமை பெறும் ; அந்நிலத்தைக் காட்டிலும் அங்கு தொண்டு புரியும் அடியார்கள் பெருமை பெறுவர். தொண்டர்தம் பெருமை சொல்ல வும் பெரிதன்றோ ? தொண்டக்குலத்தில் உள்ளவரைத்தான், “வம்மின் ! எம்பெருமானது கல்யாண குணங்களையும் அவனது திருநாமங்களையும் சொல்லுமின்”! என்று பெரியாழ்வார் அழைக் கின்றார்.

பண்டைக்குலத்தைத் தவிர்ந்து, திருமாலுக்கு வழி வழியாகத் தொண்டு புரிந்து அவன் குடிக்களைந்தன குடி மகிழும் அடியார் பலர் திருக்கோட்டியூரகத்தே வாழ்ந்தனர். அவ்வடியார்களில் தலை சிறந்து தொண்டருள் தொண்டராக விளங்கியவர் செல்வநம்பி என்ற பெரியாராகும். செல்வநம்பி உரகமெல்லணையானுக்கு மிகவும் அணுக்கராயிருந்து அந்தரங்க கைங்கரியம் செய்து போந்தார்.

செல்வநம்பியை "அல்வழக்கு ஒன்றுமில்லா அணி கோட்டியர் கோன்" என்று கூறுகின்றார். திருக்கோட்டியூரினர் நெறியல்லா நெறியினைச் சிந்தித்தறியார்; செய்யாதன செய்தறியார். வைணவர்களுக்கு வழக்கல்லாத தீய நெறிகளாவன: இவ்வுடலே ஆன்மா என்று நினைப்பது. ஆன்மா சுதந்திரமானது என்று பிரமிப்பது. தன்னைத் தானே காப்பாற்ற முடியும் என்று கருதுவது. கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறருமான ஆபாச பந்துக்களிடத்தே பற்றுக்கொள்ளுதல், அற்ப விஷயங்களிலே ஊற்றம் கொள்ளுதல் என்பனவாம். இத் தீய நெறிகள் ஒன்றும் அறியப் பெறுதவர் திருக்கோட்டியூரார். இத் தீநெறிகள் இன்மையே அவர்களுக்கு அணிகலனும். அத்தகைய அவ் வழக்கு ஒன்றுமில்லா அணி கோட்டியர்க்குக் கோன் போன்றவர் செல்வநம்பி. பலனைக் கருதாது பணிபுரிவதே செல்வநம்பியின் சிறப்பு. "படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பனே" என்றபடி எம்பெருமான் திருவுள்ளம் மலர்தலைக் காணவே கைங்கரியம் செய்தார் செல்வ நம்பி.

'திருமாலே! செல்வநம்பியைப் போலவே நானும் உனக்குப் பழ அடியேன்! என்று திருமாலிடம் கட்டுரைக்கின்றார் ஆழ்வார். அடியார்க்கெல்லாம் ஒரு உதாரண புருஷராக விளங்கினார் செல்வ நம்பி.

பெரியாழ்வார் மீண்டும் 'நாவகாரியம்' என்று தொடங்கும் பதிகத்தில் செல்வநம்பியைச் சிறப்பிக்கின்றார்,

குளிர்ந்த குணங்களை உடையவர் செல்வநம்பி. நேர்மையான செயலைச் செய்துமுடிக்கும் ஆற்றல் பெற்றவர் அவர். எல்லோருடைய அபிமானத்தையும் பெற்றவர். திருக்கோட்டியூர்ச் செங்கண் மால் தானே செல்வநம்பியைச் சேவகங் கொண்டாராம். நாள் தோறும் எம்பெருமானுக்குத் தொண்டு புரிவதே வாழ்வாகக் கொண்டவர் நம்பி.

செல்வநம்பி பாண்டியன் ஸ்ரீ வல்லபதேவனிடம் அரசவைப் புரோஹிதராகப் பணியாற்றினார். பெரியாழ்வார் பாண்டியன் அவைக்குச் சென்று கிழியறுத்துத் திருமாலே பரம்பொருள் என்று நிலைநாட்ட உறுதுணையாயிருந்தவர் இச் செல்வநம்பிதான்.

இச் செல்வநம்பியின் மனைவியார் கணவனுக்கேற்ற கருத்துக் கொண்ட பதிவிரதையாக விளங்கினர். அவர் 'நங்கையார்' என்றழைக்கப்பட்டார்,

திருவாய்மொழி எட்டாம்பத்து பத்தாம் திருவாய்மொழி இறுதிப் பாசுரத்தில், திருவாய்மொழி வல்லார்கள் நல்ல பதத்தால் கொண்ட பெண்டிர் மக்களுடன் மனைவாழ்வர் என்று நம்மாழ்வார் கூறுகின்றார். நம்பிள்ளை ஈட்டில் பெண்டிர் எவ்வகை இலட்சணங் களுடன் விளங்கவேண்டும் என்று விவரித்தருளும்போது செல்வ நம்பியின் மனைவியரான நங்கையாரைக் குறிப்பிடுகிறார்.

திருவனந்தபுரத்துக்குச் சென்றுகொண்டிருந்த சில பாகவதர்கள் வழியிடையில் திருக்கோட்டியூரில் செல்வநம்பியின் திருமாளிகை யில் சென்று புக்கார்கள், அப்போது செல்வநம்பி வெளியே சென் றிருந்தார். விருந்தோம்பலில் தலைசிறந்தவர் நம்பி; அதற்கு உறுதுணை யாயிருந்தார் நங்கையார். களஞ்சியத்திலே வித்திடக் கட்டிவைத் திருந்த நூறுகோட்டை நெல்லையும் குத்தி அரிசியாக்கி வந்த வைண வர்களை அமுதுசெய்தருளப்பண்ணி மகிழ்ந்தாள், மறுநாள் நம்பி வந்து பார்க்க, விதை நெல் காணுது. நங்கையாரை நோக்கி, "நங்காய்! நாளை வித்திட வைத்திருந்த நெற்கோட்டைகள் எங்கே? என்று வினவினர், நங்கையாரும், "ஸ்வர்மி! அவற்றை பரமபதத்திலே விளைவதாக வித்தினேன்" என்று பதிலுரைத்து வணங்கினள். இவ்விடத்து ஈட்டு ஸ்ரீ ஸூக்திகள்:- "திருவனந்தபுரத்துக்குச் சாத்தாகப் போகாநிற்கச் செய்தே திருக்கோட்டியூரிலே செல்வநம்பி திருமாளிகையிலே போய்ப் புக்கார்களாய் நம்பி தாம் அஸந்நிஹித ராயிருக்க நங்கையார் நூறுவித்துக் கோட்டை கிடக்க அவற்றைக் குத்தி ஸ்ரீ வைஷ்ணவர்களை அமுதுசெய்யப் பண்ணிவிட பிற்றை நாள் நம்பி வந்து அவை செய்ததென் என்ன பரமபதத்திலே விளை வதாக வித்தினேன் என்றுளாம்,

திருப்பல்லாண்டுப் பாசுரம்:—

அவ்வழக்கு ஒன்றுமில்லா அணிகோட்டியர் கோன் அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! நானுமுனக்குப் பழவடியேன்
நல்வகையால் நமோ நாராயணாவென்ற நாமம் பலபரவி
பல்வகையாலும் பவித்திரனே! உன்னைப் பல்லாண்டு கூறுவனே!

பெரியாழ்வார் திருமொழிப் பாசுரம்:—

நளிர்ந்தசீலன் நயாசலன் அபிமாநதுங்கனை நாடொறும்
தெளிந்த செல்வனைச் சேவகங் கொண்ட செங்கண்மால்
திருக்கோட்டியூர்
குளிர்ந்துறைகின்ற கோவிந்தன் குணம் பாடுவாருள்ள நாட்டினுள்
விளைந்த தானியமும் இராக்கதர் மீதுகொள்ளகிலாதே.

வேதமுதல்வன்:

மாநிலம் சேவடியாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கையாக
விசும்பு மெய்யாகத் திசைகையாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண்ணாக
இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய
வேதமுதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரியோனே.

—*நற்றிணை.*

திருக்கோட்டியூரில் பட்டர்:

இராமாநுசருக்குப்பின் திருவரங்கத்திலே எம்பெருமானார் தரிசனத்தை நிர்வகித்துப் போந்தவர் பராசர பட்டர். பட்டர் ஒரு சமயம் சோழன் வீரசுந்தரப் பிரமராயன் உபத்திரவம் தாங்கமாட்டாது திருவரங்கம் நீங்கிப் பாண்டிநாட்டுத் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருந்தார். அப்பொழுது சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் பட்டரை அணுகி ஆண்டாள் விஷயமாக ஒரு கவிதை இயற்றும்படி வேண்டி நின்றனர். உடனே பட்டரும் வடமொழியில் அதியற்புதமான ஒரு சுலோகத்தை அருளிச்செய்தனர், திருப்பாவையின் தனியனாக அந்த சுலோகம் விளங்குகிறது.

நீளாதுங்க ஸ்தநகிரிதட ஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதி சத சிரஸ்ஸித்தமத்யாபயந்தீ 1
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜிநிகளிதம் யாபலாத்க்ருத்யபுங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய:

பராசர பட்டர் ஸ்ரீ சௌமியநாராயணன்மீது கோஷ்டீஸ்தவம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

கல்வெட்டுச் செய்திகள்

(R. ரெங்கராஜன், B. A., B. T.)

ஒருநாட்டின் வரலாற்றை அறிய உதவும் சான்றுகளில் முக்கிய மானவை கல்வெட்டுக்களாகும். பழந்தமிழ் அரசர்கள் தம் நாட்டின் நடைமுறைகளையும், தமது அறச் செயல்களையும் கோயில்களில் கல்வெட்டுக்களாகப் பொறித்தனர். திருக்கோட்டியூர் சொக்கநாரா யணப்பெருமாள் கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின் றன. சோழ மன்னர்கள், பாண்டிய மன்னர்கள், விஜயநகரப் பேரரசர்கள் முதலான அரசர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் இங்கு பல உள.

பாண்டிய மன்னர்கள்:— திரிபுவன சக்கரவர்த்தி குலசேகர பாண்டியன், ஸ்ரீ வல்லபதேவன், கோனேரின்மை கொண்டான் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டியத் தேவன். பாண்டியன் சடையமாறன், மாறவர்மன் விக்கிரம பாண்டியன் முதலிய பாண் டிய மன்னர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

சோழ மன்னர்கள்:—குலோத்துங்க சோழன். முதலாம் இராஜ ராஜன், இராஜேந்திர சோழ தேவன். முதலான சோழப் பேரரசர்கள் குறிப்பிடப்படுகின்றனர்,

விஜயநகர மன்னர்கள்:— சதாசிவ மகாராயர் என்பவர் குறிப் பிடப்படுகிறார்.

தஞ்சை நாயக்க மன்னர்கள்:—ரெகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர் முதலிய நாயக்க மன்னர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

திரிபுவன சக்கரவர்த்தி குலசேகர பாண்டியன்:—(கி. பி. 1162) ஆட்சியின் முதலாம் ஆண்டுக் கல்வெட்டொன்று (தாயார் சந்நிதி யின் முன் மண்டபத் தூண் ஒன்றில்) வீரபாண்டிய மரக்கால் என்ற முகத்தலளவைப் பெயர் காணப்படுகிறது. நிலம் அளக்குங்கோல் 'குடிதாங்கி' என்று அழைக்கப்பட்டது. (288)

வெஞ்சன அறையில் தென்புறத்துச் சுவரில் பாண்டியன் சடையமாறன் காலத்திய வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இச் சடையமாறன் கி. பி. 765-ல் அரசுபுரிந்த மாறவர்மன் இராசசிம்மன் மகன் ஜடாவல்லபவர்ம பராந்தக நெடுஞ்சடையன் என்பவன். இவன் வைணவப் பற்றுக்கொண்ட பாண்டிய மன்னன். இவன் ஆட்சிக்காலத்தே 'கன்னிக்குடி' என்ற பெண் ஒருத்தி சொக்கநாராயணப் பெருமாளுக்குத் திரு நுந்தா விளக்கு எரிக்கைக்காகப் பல அறங்களைச் செய்துள்ளாள்.

(287 of 1923)

பாண்டியன் ஜடாவர்மன் ஆட்சியில் ஆத்ரேய சங்கரநாராய ணன் என்பான் ஒருவன் தான் பிறந்த நக்ஷத்திரமான கார்த்திகை யில் கேரளசிங்கப் பெருமாளுக்குப் பூசைகள் செய்யச் சில அறங்கள் செய்தான். நரசிங்கமூர்த்திக்குக் கேரளசிங்கப் பெருமாள் என்ற பெயர் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்து (298) திருக்கோட்டியூர் கோயிலில் ஸ்ரீ காரியம் செய்வானுக்குப் பிரசாத மரியாதைகள் அளிக்கும்படி அக் கோயில் தருமசபையார் கட்டளை பிறப்பித்தனர். மேற்குறிப்பிட்ட ஸ்ரீ கார்யம் செய்வான் மார்கழி மாதம் திரு அத்யயன உத்ஸவத்தில் பகற்பத்தில் 'திருமொழி' சேவிக்க ஏற்பாடு செய்தான். இதற்கு சோழகுலாந்தக சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த காளமேக தாசன் என்பான் ஒரு வைணவன் பொன் அளித்தான்.

திருமாலிருஞ் சோலைதாஸன் என்பான் ஒரு வைணவன் வைகாசி மாதத்தில் பெருமாளுக்கு வஸந்த உத்ஸவம் நடத்தி வைத்தான். (299)

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக் கல்வெட்டு ஒன்று (301) ஒரு சோக நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. கோயில் அர்ச்சக ரான வாமன பட்டர் என்பவர் கோவிலினின்றும் இரவு வீடு திரும்புகையில் அளியங்கையன் சத்தியநாவான் என்பவனால் கொலை செய்யப்பட்டார். இக் கொலை ஐப்பசி 25-ம் நாள் நிகழ்ந்தது. கொலை செய்தோன் பிடிபட்டு அவனது வீடு, நிலம், மனைவி,

பணியாட்கள் எல்லாம் அரசனுல் பறிமுதல் செய்யப்பட்டன. அவனுக்குச் சொந்தமாயிருந்த கருவேற்குறிச்சி கிராமமும் பறிமுதல் செய்யப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் நாயனர் சொக்கநாராயணப் பெருமாளுக்குத் திருநாமத்துக் காணியாக விடப் பட்டன. மற்ருெரு கல்வெட்டு, கொலேகாரனைப் பதிலுக்குக் கொன்றுவிட்டனர் என்றும், சதியில் உடன்பட்டிருந்த சோலே மலேப்பெருமாள் என்பவனுடைய சொத்துக்களும் பறிமுதல் செய் யப்பட்டன என்றும் குறிப்பிடுகிறது.

ஜடாவர்ம வீரபாண்டியன் ஆட்சியின் 16-வது ஆண்டில் 'வழுதியதரையன்' என்பான் சொக்கநாராயணப் பெருமாளுக்கு ஒரு மண்டபம் கட்டுவித்தான். அவன் பிறந்தநாளான வைகாசி உத்திரட்டாதியில் பெருமாளே அங்கு எழுந்தருளப் பண்ணுவதற் காகப் பொன்னும் நிலமும் அளித்துள்ளான்.

கோயிலேச் சுற்றியிருக்கும் திருமதிளே நாலுகவிப் பெருமாள் என்பவன் கட்டுவித்தான். இத் திருமதிளுக்குக் 'கோதண்டராமன் திருமதிள்' எனப் பெயர் காணப்படுகிறது. இத் திருமதிள் கட்டு வித்ததற்காக இந் நாலுகவிப் பெருமாளுக்கு அரளியூர் கிராமத்தை வரியிலியாகத் திருவிடையாட்டமாகக் கோயில் தரும சபையார் வழங்கினர். திருமதிள் கட்டப்பெற்றது கோனேரிகொண்டான் சுந்தரபாண்டியன் ஆட்சி செலுத்திய காலம். (306)

திரிபுவனச் சக்கரவர்த்தி ஜடாவர்மன் வீரபாண்டியன் சொக்க நாராயணப் பெருமாளுக்கு ஏராளமான உத்ஸவங்கள் நடத்தி வைத்தான். (305)

கி. பி. 1545-ல் விஜயநகர நாயக்க வமிசத்தைச் சேர்ந்த சதாசிவ ராயர் என்பவர் சொக்கநாராயணப் பெருமாளுக்குக் குலோத்துங்க சோழப்பேரேரி என்ற கிராமத்தை முற்றூட்டாக அளித்தான். (292)

திருக்கோட்டியூர் சொக்கநாராயணப் பெருமாள் கோயிலில் தஞ்சை நாயக்கர் காலத்தில் ஒரு இராமாநுஜகூடம் நிறுவப்பட்டது. தஞ்சையை ஆண்ட ரெகுநாத நாயக்கர் (சகம் 1529) ஆணையின் பேரில் கொழுந்தப்பர் என்பவர் இராமாநுஜகூடத்தில் நாள்தோறும் பிராம்மணருக்கு அன்னமிடச் சில கட்டளேகள் பிறப்பித்தான்.


விஜயதசமியன்று பெருமாள் குதிரை வாகனத்தின்மீதேறி வேட்டையாடச்செல்வது வழக்கம். ரெகுநாத சேதுபதி என்ற சேது மன்னர் பெருமாள் பாரிவேட்டை கண்டருளவென்று கருக்காலி வயல் என்ற கிராமத்தை வரியிலியாக விட்டுக்கொடுத்தார்.

கோயில் வரலாறு.

